[redacted]

# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## சட்டமாணிப் பரீட்சை, ஆண்டு II – 2017

## குடும்பச் சட்டம்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: **07**

எவையேனும் **நான்கு (04)** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.
(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

1) திருமணம் மற்றும் குடும்ப உறவுகள் தொடர்பில் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளின் சமமான நடாத்துகையினை உறுதிப்படுத்துகின்ற வகையில் பெண்களுக்கெதிரான அனைத்து வகையான பாரபட்சங்களையும் இல்லாதொழிப்பதற்கான சமவாயத்தினுடைய (CEDAW) உறுப்புரை 16 இனால் விதித்துரைக்கப்படுகின்ற சர்வதேசப் பொறுப்புடமைகளுடன் இலங்கையின் குடும்பச் சட்டம் எந்தளவிற்கு இணங்கியொழுகியுள்ளது?

ஆராய்க. உமது விடையினை ஆதாரப்படுத்துவதற்குப் பொருத்தமான சமவாயங்கள், அரசியலமைப்பு மற்றும் நியதிச் சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டம் என்பவற்றை ஆதாரங் காட்டுமாறு நீர் வேண்டப்படுகின்றீர்.

2) சுசீலா என்பவளும் ரவி என்பவனும் ஏப்ரல் 2010 இல் திருமணஞ் செய்தனர். திருமணம் முடிந்து இரண்டு வாரங்களின் பின்னர், செயற்றிட்ட வேலைக்காக ரவி ஆறு மாத காலத்திற்கு நியூசிலாந்திற்குச் சென்றான். அவளுடைய அலுவலகத்திலுள்ள தொழிற் கடமைகளின் காரணமாக அவனுடன் இணைந்து நியூசிலாந்திற்குச் செல்ல சுசீலா மறுத்தாள். அவளுடைய மகளான கீதாவினை டிசம்பர் 2010 இல் சுசீலா பிரசவித்தாள். நாட்டிற்குத் திரும்பி வந்தவுடன் அவளுடைய அலுவலக சக உத்தியோகத்தரான நந்தன் என்பவனுடன் சுசீலா கொண்டிருந்த நெருக்கமான தொடர்பினை அவனுடைய பெற்றோரின் மூலமாக ரவி அறிந்து கொண்டான். இவ் உறவு தொடர்பில் சுசீலாவுடன் ரவி சண்டையிட்டதுடன் அதனை உடனடியாக நிறுத்துமாறும் அவளைக் கேட்டுக் கொண்டான். இக் கோரிக்கையினை சுசீலா புறக்கணித்ததுடன் நந்தனுடன் தொடர்ந்தும் உறவைப் பேணினாள். தற்போது பிள்ளையின் தந்தைமையினை ரவி மறுதலிப்பதுடன் சுசீலா மற்றும் பிள்ளையினை பராமரிக்க மறுக்கின்றான்.

சுசீலாவின் சட்டத்தரணியாக நீதிமன்றத்தின் முன்னிலையில் எவ்வாறு உமது வழக்கினை சமர்ப்பிப்பீர் என்பதனையும் எதிர்தரப்பு சட்டத்தரணியின் வாதங்களை எவ்வாறு எதிர் கொள்வீர் என்பதனையும் ஆராயுமாறு நீர் வேண்டப்படுகின்றீர். உமது ஆராய்வானது பொருத்தமான நியதிச்சட்ட ஏற்பாடுகளையும் தீர்ப்புச் சட்டத்தினையும் மற்றும் விஞ்ஞான ரீதியிலான சான்றினை அனுமதிப்பதற்கான சாத்தியப்பாடுகளையும் உள்ளடக்க வேண்டும்.

3) (i) திருமணம் தொடர்பான முஸ்லிம் சட்டமானது திருமணங்களினைப் பதிவிடுதல் தொடர்பில் பொதுச் சட்டத்தினை விட மிகவும் சிறந்த அணுகுமுறையினைக் கொண்டுள்ளது. ஆராய்க.

(ii) பாத்திமாவினுடைய தந்தை அவரது 15 வயதான மகளினை செல்வந்த வியாபாரியான அக்ரம் என்பனுக்கு திருமணம் செய்து கொடுக்க ஆயத்தங்களை மேற்கொள்கின்றார். அக்ரமினை திருமணஞ் செய்ய பாத்திமா விரும்பவில்லை என்பதுடன் கல்வி கற்று மருத்துவரொருவராக விரும்புகின்றாள்.

பாத்திமாவிற்கும் அக்ரமிற்குமிடையில் திட்டமிடப்பட்ட திருமணத்தின் வலிதுடமையினை முஸ்லிம் சட்டத்தின் கீழ் ஆராயுமாறு நீர் எதிர்பார்க்கப்படுகின்றீர். சர்வதேச மற்றும் தேசிய சட்டத் தராதரங்கள் மற்றும் பொருத்தமான தீர்ப்புச் சட்டம் என்பவற்றின் பின்னணியில் உமது வாதங்களினை ஆதாரப்படுத்துக.

4) 'பிள்ளையின் பாதுகாவல் (custody) மற்றும் கட்டுக்காவலினை (guardianship) வழங்குவதற்கான அடிப்படைகள் தொடர்பான ஒத்திசைவொன்றை இலங்கைச் சட்டம் இன்னும் அடையவில்லை.

மேற்போந்த கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? இலங்கையினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச கடப்பாடுகளுடன் தொடர்புறுத்தி உமது ஆய்ந்துரையானது ஆதாரப்படுத்தப்பட வேண்டும். ஆகக் குறைந்தது வேறொரு நியாயாதிக்கத்தினை மேற்கோள் காட்ட வேண்டியது தேவைப்பாடாகும்.

5) கமலா என்பவளும் சரத் என்பவனும் 1994 ஆம் ஆண்டில் திருமணஞ் செய்ததுடன் மூன்று பிள்ளைகளின் பெற்றோருமாவார். பத்தொன்பது வயதான சாரா என்பவள் பல்கலைக்கழக மாணவியொருவராக இருப்பதுடன் பதினேழு வயதான நிமால் கொழும்பிலுள்ள பாடசாலையொன்றில் கல்வி கற்கின்றான். ஐந்து வயதான சதுனி விசேட தேவையுடைய

பிள்ளையொருவராக இருப்பதுடன் அவ்வாறான பிள்ளைகளுக்கான பாடசாலைக்கு அவளை அனுப்புவதற்கு கமலா விரும்புகின்றாள்.

சரத் வியாபாரியொருவராக இருப்பதுடன் தன்னுடைய பெருந்தோட்டங்களை பார்த்துக் கொண்டு கண்டியில் வசிக்கின்றான். தற்போது சில மாதங்களாக தன்னுடைய குடும்பத்தினைப் பார்ப்பதற்கு அவன் வருகைதராததுடன் அவர்களுடைய செலவுகளைக் கவனிப்பதனை வேண்டுமென்றே புறக்கணித்துள்ளான்.

தன்னையும் பிள்ளைகளையும் பராமரிப்பதில் கமலா சிரமங்களை எதிர் கொள்கின்றாள். சரத்திடமிருந்து அவள் பராமரிப்பினைக் கோரிய போது, அவனுடைய தொழில் வங்குரோத்து நிலையினை அடைந்து விட்டதெனவும் பராமரிப்பினை செலுத்துவதற்கு அவனிடம் போதுமான வருமானம் இல்லை எனவும் அவன் தெரிவித்தான். சாராவினைப் பராமரிப்பதற்கான பொறுப்புடமை தனக்கில்லை என சரத் கோருவதுடன் நாட்டிலுள்ள உயர் கல்வி நிறுவனங்கள் எப்போதும் பகிஷ்கரிப்பில் ஈடுபடுவதனால் நிமால் அவனுடைய உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதில் பயனெதுவும் இல்லை எனவும் நினைக்கின்றான். சதுனியின் கல்விக்குச் செலவழிப்பது முற்றிலும் வீண் பணவிரயமானது எனவும் அவன் நினைக்கின்றான். வேறொருவருடன் சோர உறவொன்றில் அவள் உள்ளதாகக் கூறி கமலாவிற்கு பராமரிப்பினைச் செலுத்த அவன் மறுக்கின்றான்.

1999 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க பராமரிப்புச் சட்டத்தின் பின்னணியில் கமலாவிற்கு ஆலோசனை வழங்குக. உமது விடையினை பொருத்தமான தீர்ப்புச் சட்டத்தினால் ஆதாரப்படுத்துக.

6) "ஆழ்ந்த சிந்தனைகளற்ற நிலையில் கவனஞ் செலுத்துவதனை விடுத்து திருமண உறவு தொடர்பான யதார்த்த நிலைகளுடன் நீதிமன்றங்கள் பற்றிக் கொள்பவைகளை பெற்றுக் கொள்வதற்கு அது வழிசெய்யும் என்பதும் திருமண முறிவுக் கொள்கையினை (Principle of breakdown) நாங்கள் பரிந்துரைப்பதற்கான காரணங்களில் ஒன்றாக அமைகின்றது."

*Putting Asunder* – A Divorce Law for Contemporary Society, Report of the Committee appointed by the Archbishop of Canterbury (1964), p.58.

மேற்போந்த கூற்றானது விவாகரத்திற்கான குற்ற அடிப்படையிலான முறைமையினை (Fault based system) கைவிடுவதற்கான தர்க்க நியாயமொன்றை வழங்குகின்றதா? ஆகக் குறைந்தது வேறொரு நியாதிக்கம் மற்றும் கண்டியச் சட்டம் என்பவற்றிலிருந்து சாதகமான உத்வேகத்தினைப் பெற்று விவாகரத்திற்கான அதனுடைய பொதுச் சட்டத்தினை இலங்கை எவ்வாறு மறுசீரமைக்கலாம் என்பதனை ஆராய்க.

7) சூர்யா என்பவனும் சஹானி என்பவளும் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சந்தித்ததுடன் அவர்களுடைய குடும்பங்களின் விருப்பங்களுக்கெதிராக திருமண ஒப்பந்தத்தினைச் செய்து கொண்டனர். மாத்தறையில் இருந்த அவளுடைய குடும்பத்துடன் அனைத்து தொடர்புகளையும் சஹானி கைவிட்டதுடன் கொழும்பில் சூர்யாவுடன் வசித்தாள். சில ஆண்டுகளின் பின்னர், அவனுடைய வேலையினை சூர்யா இழந்ததுடன் சூர்யாவையும் சஹானியையும் அவனுடைய பெற்றோர் குடும்பத்தினுள் ஏற்றுக் கொண்டனர். சூர்யாவின் பெற்றோருடன் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் வசிப்பதற்காக சஹானி மற்றும் சூர்யா சென்றனர். சூர்யாவின் பெற்றோர் இருவரும் யாழ்ப்பாணத்தில் பிறந்தவர்கள் என்பதுடன் பல்கலைக்கழகம் செல்லும் வரை சூர்யாவும் யாழ்ப்பாணத்திலேயே வசித்திருந்தான். பின்னர் நிலா என்ற மகளையும் ஷியாம் என்ற மகனையும் அவர்கள் பெற்றனர். பிள்ளைகள் மீது பாசமுற்ற சூர்யாவின் பெற்றோர் அவர்களுடைய யாழ்ப்பாணத்திலிருந்த வீட்டையும் திருகோணமலையிலிருந்த காணியையும் சூர்யாவிற்கு கொடையளித்ததுடன் அதில் அவன் அக் காணியில் தன்னுடைய சொந்த கைத்தறித் தொழிற்சாலையினை ஆரம்பித்தான்.

யாழ்ப்பாண வைத்தியசாலையில் தாதியாக பணிபுரிந்து வந்த சஹானி அத் தொழிற்சாலையினை அமைப்பதற்கு சூர்யாவிற்கு உதவி செய்வதற்காக தன்னுடைய வேலையினை இராஜினாமா செய்தாள். தொழிற்சாலையினை நிர்மாணிப்பதற்காக அவசரமான நிதி நெருக்கடியில் சூர்யா இருந்த போது, அவளுடைய சேமிப்பு மற்றும் திருமணத்திற்கு முன்னர் அவளுடைய பெற்றோர் அன்பளிப்பாக வழங்கிய தங்க நகைகளை அடவு வைத்துப் பெற்ற பணம் என்பவற்றை சஹானி வழங்கினாள். தொழிற்சாலையானது விரைவாக விருத்தி அடைந்ததுடன் பெருமளவு இலாபம் ஈட்டத் தொடங்கியது. வியாபார நிமித்தமாக அடிக்கடி அவன் கொழும்பிற்கு பிரயாணம் செய்வதால் மரணம் மற்றும் பாரிய ஊறினை உள்ளடக்குகின்ற ஆயள் காப்புறுதியொன்றினை சூர்யா பெற்றுக் கொண்டான். அதே நேரத்தில், அவனுடைய வியாபார ஆலோசகரான மாயா என்பவளுடன் உறவொன்றையும் சூர்யா ஏற்படுத்திக் கொண்டதுடன் சிவா என்ற பெயரில் மகனொருவன் அவர்களுக்கு இருந்தான்.

கொழும்பிற்குச் செல்லும் போது சூர்யா விபத்தொன்றில் மரணமடைந்தான். இருபத்தி நான்கு வயதான நிலா திருமணஞ் செய்துள்ளாள். ஷியாமுக்கு பதினைந்து வயதாகியுள்ளது. சிவாவிற்கு இரண்டு வயது என்பதுடன் அவன் மாயாவுடன் வசிக்கின்றான். சூர்யாவிற்கு சொந்தமாகவிருந்த ஆதனம் தொடர்பிலான சஹானி மற்றும் பிள்ளைகளின் மரபுரிமைகளை ஆராய்க.